**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.157/2018**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 11.03.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புஷ்பவள்ளி | ஜாதி | : |
| க/பெயர் | : ராஜாங்கம் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கானது ராஜசேகருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 மற்றும் 2 வாதிகள் எனது மகன்கள் ஆவார்கள். அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற அடிப்படையில் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் தற்போது லெக்கணாம்பேட்டை என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 1 மற்றும் 2 வாதிகள் தற்போது சிங்கப்பூரில் இருந்து வருகிறார்கள். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான இடத்திலிருந்து நான் வெளியே வரவிடாமல் அவருக்கு சொந்தமான இடத்தில் பிரதிவாதி கேட் வைத்துள்ளார். எனது இடத்தை சுற்றிலும் பிரதிவாதிக்கு சொந்தமான இடம் உள்ளது. அவருக்கு சொந்தமான இடத்தில் வைத்துள்ள கேட்டை எடுக்க கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்தெந்த சர்வே எண்ணிற்கு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக சொல்லதெரியவில்லை. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள அட்டவணை சொத்துக்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். எவ்வளவு

விஸ்தீரணம் என்றால் 100 குழி உள்ளது. தெற்கு வடக்கில் 4 மீட்டர் ரோடு உள்ளது. கிழக்கு மேற்கில் 37 மீட்டர் தூரம் உள்ளது. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் நான்கு புறத்திலும் இருந்த நபர்கள் பிரதிவாதியிடம் விற்று விட்டார்கள். அதனால் 4 புறத்திலும் பிரதிவாதியிடம் தான் உள்ளது. நானும் பிரதிவாதியிடம் எனது சொத்தை விற்று உள்ளேன். தாவா சொத்தின் புல எண் விஸ்தீரணம் குறித்து எனது மகன்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனது வழக்குரையில் பொதுபாதை உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதவாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.11 18:34:53 +0530

District Munsif

Mannargudi.